2008 மே 5]

195—

குடமுழுக்கு

***34497—திரு. கே.எஸ். விஜயகுமார்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி வட்டம், பனப்பாக்கம் ஊராட்சி, அருள்மிகு பிச்சாலீஸ்வரர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பனப்பாக்கம் ஊராட்சி, அருள்மிகு பிச்சாலீஸ்வரர் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் 3 நிலை இராஜகோபுரம் மிகவும் பழுதடைந்துள்ளது. இதனைப் புதுப்பிக்க சுமார் ரூ.10.00 இலட்சம் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இப்பணியைச் செய்திட தற்போது திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. இருந்தாலும், இத்திருக்கோயில் திருப்பணியில் ஆர்வம் மிக்கவர்களைப் பயன்படுத்தி, நிதி திரட்டியும், துறையின் சார்பில் நிதியளித்தும் திருப்பணிகளைச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் த்லைவர் அவர்களே, கும்மிடிப்பூண்டி வட்டம், பனப்பாக்கம் ஊராட்சி, அருள்மிகு சௌந்தரவல்லி—பிச்சாலீஸ்வரர் திருக்கோயில் மிகவும் பழமைவாய்ந்த கோயில் ஆகும். இக்கோயில் 11 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. புலவர்கள், நாயன்மார்களால் பாடப்பெற்ற புண்ணியத்தலம். கோபுரங்கள், த்வஜஸ்தம்பம், சுவாமிப்பட்டறை, கோயிலின் இருபக்கமும் உள்ள குளம், சுற்றுச் சுவர் என்று அழகாக அமைந்திருந்த இந்தக் திருக்கோயில் பக்தர்களுக்கு அருள் வழங்கி

வந்துள்ளது. இவ்வளவு பழமைவாய்ந்த இத்திருக்கோயில் மிகவும் சிதிலமடைந்து சிதைந்துகொண்டிருக்கிறது. இக்கோயில் முறையாக பராமரிக்கப்படாமல், யாரும் கவனிப்பாரற்று உள்ளது. இக்கோயில் கோபுரத்திலுள்ள சிற்பங்கள் அனைத்தும் கட்டையினால் செய்யப்பட்டிருக்கின்றன. இக்கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்து 100 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ஆகவே, இத்திருக்கோயில் பணிகள் முடித்து கும்பாபிஷேகம் நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ.10 இலட்சம் ஆகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். அந்த கிராமத்து மக்கள் சுமார் 50 இலட்சம் ரூபாய்க்கு மேல் நிச்சயமாக கூடுதலாக ஆகும் என்று கேட்டிருக்கிறார்கள். தொல்பொருள் ஆய்வாளர்கள்கூட இந்தத் திருக்கோயில் 11 ஆம் நூற்றாண்டு கட்டப்பட்டது என்று அறிவித்திருக்கிறார்கள். அந்த மதிப்பீட்டினை உயர்த்த வேண்டும். பக்தர்களும், கிராம மக்களும் நிதிதர முன்வருவதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

அதேபோல், கடந்த வாரம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தபோது, 50 சதவிகிதத்திற்குக் கூடுதலாக பக்தர்கள் தங்களுடைய பங்குத் தொகையை அளித்தால் திருக்கோயில் திருப்பணிகள் நடைபெறுவதற்கு அறநிலையத் துறை தயாராக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, இப்போது அந்தக் கிராம மக்கள் ரூ.50 இலட்சத்திற்குக் கூடுதலாக தேவை என்று அறிவித்திருக்கிறார்கள். இத்திருக்கோயில் 11 ஆம் நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்ட மிகவும் பழமைவாய்ந்த கோயிலாக உள்ளது. கொள்கை முடிவு என்று பாராமல், அரசு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்தால் மக்களும் பங்கேற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், அது பழமையான திருக்கோயில். 100 ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கோயிலில் பணிகள் எதுவும் நடைபெறவில்லை. குடமுழுக்கும் நடைபெறவில்லை. முதல்கட்டமாக, அங்கே இராஜகோபுரம் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது என்று துறையின் சார்பிலே தெரிவிக்கப்பட்டிருப்பதன் காரணத்தினாலே, இராஜகோபுரத்தினைக் கட்டுவதற்கான திட்ட

2008 மே 5]

மதிப்பீடுகள் கேட்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், அவர் விரும்புவதுபோல செய்வதானால் ரூ.50 இலட்சத்திற்கு மேல் என்றாலும்கூட, மூன்றில் இரண்டு பங்கு நிதியை அவர்கள் திரட்டித் தந்தால் ஒரு பங்கு நிதியினை துறையின் சார்பிலே தருவதற்குத் தயாராக இருக்கிறோம். மேலும், சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்தவுடன் நான் அங்கே நேரடியாக வருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அங்கே வந்து என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று சொன்னால் அவற்றை மேற்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

திரு. கே.எஸ். விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனப்பாக்கம் ஊராட்சி 1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதியில் அமைந்திருந்தது. அந்தக் கிராம மக்கள்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வருகை தருவதற்காக மூன்று முறை programme fix செய்து கடைசி நேரத்தில் அவர் வர இயலாத காரணத்தினால் இரத்து செய்யப்பட்டது. இப்போது சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்தவுடன் அங்கே வருவதற்கு சம்மதித்திருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகள் அங்கே செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் பங்கு என்று தெரிவித்திருக்கிறார்கள். அரசு உதவியை 50 சதவிகிதமாக உயர்த்தித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 196, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

196—

தரம் உயர்த்துதல்

*57303—**திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—